JEYAVATHANY



# சைவசமயம்

## பரீட்சைத்துணை நூல்

## ஆண்டு 10

K P K. CENTRE
NO: 24. NEW. BUS STAND
VAVUNIYA

தொகுப்பு :

வேலுப்பிள்ளை உமாமகேஸ்வரன்

(சேவைக்கால ஆலோசகர்)

கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும்
புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக,
ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்பெறும் வகையில்
[illegible]54 வினாக்களும், விடைகளுமாக தொகுக்கப்பட்டுள்ளது.

வெளியீடு·
சக்தி நூல் நிலையம்
53, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

S. Jeyavathany.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சைவ சமயம் ஆண்டு - 10 |
| ஆசிரியர் | : | வேலுப்பிள்ளை உமாமகேஸ்வரன் |
| முதலாம் பதிப்பு | : | சித்திரை 1993 |
| இரண்டாம் பதிப்பு | : | ஆவணி 1994 |
| பதிப்புரிமை © | : | நூலாசிரியருக்கு |
| வெளியீடு | : | சக்தி நூல் நிலையம், மட்டக்களப்பு. |
| அச்சகம் | : | வளர்மதி அச்சகம், மட்டக்களப்பு. |
| பக்கங்கள் | : | 38 |

விலை } 22.50
Price

| | | |
|---|---|---|
| Title | : | *SAIVISM Year* - 10 |
| Author | : | Velupillai Umamageswaran |
| First Edition | : | April 1993 |
| Second Edition | : | August 1994 |
| Copyright © | : | Author |
| Published by | : | Sakthi Nool Nilayam Batticaloa. |
| Printers | : | Valarmathi Printers, Batticaloa. |
| Pages | : | 38 |

## சைவத்தின் தொன்மை

1. தில்லையம்பலக் கூத்து உணர்த்தும் தத்துவம் எது?
இறைவனின் ஐந்தொழில்கள்.

2. நாம் ஊனக்கண்ணால் காணக்கூடிய நடனம் எது?
இறைவன் தில்லையம்பலத்திலே ஆடும் கூத்து

3. ஞானக் கண்ணால் காணக் கூடிய நடனம் எது?
இறைவன் நமது இதயத்திலே தோன்றாத் துணையாய் நின்று ஆடும் கூத்து

4. தனக்கென ஒரு தொழிலும் இல்லாதவர் யார்?
சிவன்

5. சிவனின் திருவருளை நாம் எவ்வாறு அழைக்கின்றோம்?
"சக்தி" என்று அழைக்கின்றோம்

6. மெய்யுணர்வு கைவரப் பெற்றோர் இறைவனை எந்தத் திரு மேனியில் காண்பர்.
அருவத்திருமேனியிற் காண்பர்.

7. இன்றுவரை உலகிலே நின்று வழங்கும் தொன்மை வாய்ந்த சமயங்கள் எல்லாவற்றிலும் சாலவும் தொன்மையானது எது?
சைவ சமயம்

## சிந்துவெளி நாகரிகம்

8. சிந்துவெளி நாகரிக காலம் எது?
கி. மு. 3250 - கி. மு. 2750.

9. சிந்துவெளி நாகரிகம் எந்த நாகரிகத்தை ஒத்துள்ளது.
திராவிடருடைய நாகரிகத்தை ஒத்துள்ளது.

10. ஆராய்ச்சியாளரின் கருத்தின்படி சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தோர் யார்?
திராவிட இனத்தவர்.

11. சிந்துவெளியில் கண்டெடுத்த இலச்சினைகளுள் பொறிக்கப் பட்டுள்ள உருவங்களுள் கருத்தைக் கவர்வது எது?
யோகி போல அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுள்-

12. சிவன் யோகியர்களுக்கெல்லாம் தலைவன் என்பதனாற் பெறும் பெயர்கள் எவை?

யோகீஸ்வரன், மகாயோகி.

13. சிந்துவெளிக் காலத்தில் சிவனைப் போல் சிறப்பிடம் பெற்ற பெண் தெய்வம் எது?

சக்தி

14. பிற்காலச் சைவ சமயத்திலே காணப்படும் எந்த அம்சங்கள் சிந்துவெளிக்காலத்தில் காணப்பட்டன?

புனித நீராடல் (தீர்த்தம்)

அரசு போன்ற மரங்களை வழிபடுதல் (தல விருட்சம்)

காளை மாட்டை வழிபடுதல் (நந்தி)

பாம்பு வழிபாடு (நாகதம்பிரான்)

15. இலிங்கம் என்பது எதனைக் குறிக்கின்றது?

சிவனைக் குறிக்கின்றது

16. "பீடம்" என்பது எதனைக் குறிக்கின்றது?

சக்தியைக் குறிக்கின்றது.

17. "பீடலிங்கம்" என்பது எதனைக்குறிக்கின்றது?

சிவமும் சக்தியும் இணைந்து உலகைப் படைக்கும் தத்துவத்தைக் குறிக்கின்றது.

18. "சிவன்" என்பதன் பொருள் என்ன?

செந்நிறமுடையோன்

## வேதகாலம்

19. வேதகாலம் எது?

கி. மு. 1500 - கி. மு. 600

20. வேதகாலம் எப்போ தொடங்குகின்றது?

சிந்து வெளிக்காலத்தின் முடிவோடு

21. வேதகாலம் என்ற பெயர் ஏன் வந்தது?

"வேதம்" எனப்படும் தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலம் என்பதால் வேதகாலம் என்ற பெயர் வந்தது.

22. திராவிட நாகரிகமும், ஆரிய நாகரிகமும் இணைந்ததாக் தோன்றிய நாகரிகம் எது?

இந்து நாகரிகம்.

23. ஆரியர் தம்மால் வெற்றி கொள்ளப்பட்ட திராவிடரை எவ்வாறு அழைத்தனர்?

தாஸர், (அடிமைகள்) தஸ்யுக்கள்

24. இருக்கு வேதத்திலே ஆரியர் போற்றிய தெய்வங்கள் எவை?

இந்திரன், அக்கினி, வருணன், சோமன், சூரியன் பூஷன், பர்ஜன்னியன்.

25. இளமைக்கும், போர் ஆற்றலுக்கும், எழிலுக்கும் பேர் போனவர் யார்?

முருகன்

26. இருக்கு வேதகால ஆரியரின் தெய்வ வழிபாட்டு முறை எவ்வாறு இருந்தது?

"ஓமம் எனப்படும் வேள்வி முறை" (ஓமகுண்டத்திலே அக்கினியை வளர்த்து அதிலே அவியைச் சொரிந்து மந்திரங்களாலே தெய்வங்களை அழைத்து இகவாழ்வுக்கு வேண்டிய வரங்களைக் கேட்பது.)

27. பூசை என்பதன் பொருள் என்ன?

பூக்களைக் கொண்டு செய்யப்படும் இறை வழிபாடு.

28. ஆரிய நாகரிகமும், திராவிட நாகரிகமும் இணைந்ததன் விளைவாகத் தோன்றியது எது?

உபநிடதங்கள்

29. மெய்யியல் ஆராய்ச்சியில் உபநிடதங்கள் உச்ச நிலையை அடைய தலையெடுத்த சமயங்கள் எவை?

சைவம், வைணவம்

30. இந்துக்களின் சிந்தனைச் சிகரமாய் விளங்குவது எது?

உபநிடதங்கள்

31. வேதகாலத்திற்கு அடுத்த காலம் எது?

இதிகாச புராண காலம்

32. ஆகமங்கள் எப்போ உருவெடுத்தன?

இதிகாச புராண காலத்தில்

## நால் வேதம்

33. வேதம் என்ற ஆரியமொழிச் சொல்லின் பொருள் என்ன?
அறிவு

34. நான்கு வேதங்களும் எவை?
இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம்

35. நால்வேதம், நான்மறை, சதுர்வேதம், என்றெல்லாம் வேதம் அழைக்கப்படுவதன் காரணம் என்ன?
வேதங்கள் நான்காக வகுக்கப்பட்டமையால்

36 வேதங்களை நான்கு தொகுதிகளாக வகுத்தவர் யார்?
வியாச முனிவர்

37. வியாச முனிவருக்கு ஏன் 'வேத வியாசர்' என்ற பெயர் வந்தது?
வேதங்களை நான்காக வகுத்தமையால்

38. வேதங்களுள் காலத்தால் முற்பட்டது எது?
இருக்கு வேதம்

39. வேதங்களுள் காலத்தால் பிற்பட்டது எது?
அதர்வ வேதம்

40. வேதங்கள் ஏன் எழுதாமறை, எழுதாககிளவி, சுருதி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன?
தலைமுறை தலைமுறையாகச் செவிவழி மரபிலே கையாளப்பட்டு வந்தமையால்

41. வேதத்தில் உள்ள நான்கு உட் பிரிவுகளும் எவை?
சங்கிதைகளை, பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்

42. வேதத்தின் முன்னைய பகுதியாகவும் முக்கிய பகுதியாகவும் விளங்குவது எது?
சங்கிதைகள்

43. சங்கிதைகளை ஏன் மந்திரங்கள் என்று அழைக்கின்றார்கள்?
தெய்வங்களுக்கென அமைக்கப்பட்ட துதிப்பாடல்களையும் பிரார்த்தனைகளையும் கொண்டமையால்

44. யாகங்களைச் செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய சடங்குகள் பற்றி கூறும் உதவி நூல்கள் எவை?
பிராமணங்கள்

45. தெய்வங்களைத் திருப்தி செய்வதற்குரிய சிறந்த வழி எவை? என்று பிராமணங்கள் கூறுகின்றன?
யாகங்களைச் செய்வது

46. சமயச் சடங்குகளைப் பற்றிய தத்துவ விளக்கங்களைத் தொடர் உருவகக் கதைகளாகக் கூறுபவை எவை?
ஆரணியங்கள் எனப்படும் வன நூல்கள்

47. வேதத்தின் இறுதிப் பகுதிகள் எவை?
உபநிடதங்கள்

48. வேதாந்தம் என்றும் வேத சிரசு என்றும் சிறப்பித்துக் கூறப் படுபவை எவை?
உபநிடதங்கள்

49. வேதத்தின் பிரிவுகளுள் உரைநடையில் அமைந்திருப்பவை எவை?
பிராமணங்கள்: ஆரணியங்கள், உபநிடதங்கள்

50. நான்கு ஆச்சிரமங்களும் (வாழ்க்கையின் நான்கு நிலைகள்)எவை
பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்

51. வேதத்தின் மூன்று காண்டங்களும் எவை?
கர்மகாண்டம் (சமய ஆசாரங்கள் பற்றிய பகுதி)
உபாசனைக் காண்டம் (தியானத்துக்குரிய பகுதி)
ஞான காண்டம் (அறிவு தரும் பகுதி)

52. சங்கிதைகளும் பிராமணங்களும் எந்தக் காண்டத்தைச் சேர்ந் தவை?
கர்ம காண்டத்தைச் சேர்ந்தவை

53. ஆரணியங்கள் எந்தக் காண்டத்தைச் சேர்ந்தவை?
உபாசனைக் காண்டத்தைச் சேர்ந்தவை

54. உபநிடதங்கள் எந்தக் காண்டத்தைச் சேர்ந்தவை?
ஞான காண்டத்தைச் சேர்ந்தவை

55. இருக்கு வேதத்தில் எத்தனை பாசுரங்கள் உண்டு?
1028 பாசுரங்கள் உண்டு

56. இருக்கு வேதத்தில் எத்தனை மண்டலங்கள் உண்டு?
10 மண்டலங்கள் உண்டு

57. இருக்கு வேதகால பாசுரங்களில் எண்ணிக்கையைக் கொண்டு பார்க்கையில் முன்னணியில் நிற்பவர் யார்?
இந்திரன் (250 பாசுரங்கள்)

58. ''சாவித்திரி மந்திரம்'' என்ற பெயர் அதற்கு ஏன் வந்தது?
''சாவித்திரி'' என்னும் பழைய ஞாயிற்றுக் கடவுளை விளித்துப் பாடப்பட்டமையால்

59 ''காயத்திரி மந்திரம்'' என்ற பெயர் அதற்கு வரக் காரணம் என்ன?
''காயத்திரி'' என்னும் யாப்பிலே பாடப்பட்டமையால்

60. சாமம் என்பதன் பொருள் என்ன?
இசை

61. இருக்கு வேதத்திலிருந்து எடுத்து ஒழுங்கு செய்யப்பட்ட பாடல்களின் தொகுதி எது?
சாம வேதம்

62. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோர் பண்சுமந்த பாடல்களால் சிவனை வழிபடுவதற்கு வழிகாட்டியாக அமைந்தவை எவை?
சாமவேதம்

63 செய்யுள் நடையிலும், உரை நடையிலும் அமைந்த வேள்வி மந்திரங்களைக் கொண்ட வேதம் எது?
யசுர் வேதம்

64. யசுர் வேதத்தின் இரு பிரிவுகளும் எவை?
கிருஷ்ண யசுர் வேதம் (கருநிற யசுர் வேதம்)
சுக்கில யசுர் வேதம் (வெள்ளை நிற யசுர் வேதம்)

65. சுக்கில யசுர் வேதம் எவற்றைத் தருகின்றது?
மந்திரங்களோடு கிரியை முறைகள் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களைப் பிராமணம் எனப்படும் பிறச் சேர்க்கையாய் சேர்த்துத் தருகின்றது

66. அழித்தல் தொழிலைச் செய்யும் மூர்த்தி எது?
உருத்திரன்

67. தென்னாட்டுக் கோயிற் பூசையில் இறைவனுக்கு 108 பெயர் சொல்லியும் 1000 பெயர் சொல்லியும் அர்ச்சனை செய்யும் வழக்கத்துக்கு வழிவகுத்தது எது?

யசுர் வேதம்

68. மந்திரம், மாயம், மருந்து போன்றவற்றிற்கு முதன்மை அளிக்கும் வேதம் எது?

அதர்வ வேதம்.

69. பிற்கால மருத்துவக் கலையின் முளைகளைத் தன்னகத்தே கொண்ட வேதம் எது?

அதர்வ வேதம்

70. இருக்கு வேதச் சிந்தனைகளுக்கும், உபநிடதச் சிந்தனைகளுக்கும் இடைப்பட்ட நிலைமாறும் போக்கைக் காட்டும் வேதம் எது?

அதர்வ வேதம்.

## உபநிடதங்கள்

71. உபநிடதம் என்பதன் பொருள் என்ன?

மறைபொருட் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியரின் அடியிலிருந்து கேட்டல்.

72. உபநிடதம் எனப் பெயர் கொண்ட நூல்கள் எத்தனை?

108

73. உபநிடதங்களுள் சிறப்பு வாய்ந்த பன்னிரண்டும் எவை?

ஈச உபநிடதம், கேன உபநிடதம், கட உபநிடதம், பிரசின உபநிடதம், முண்டக உபநிடதம், மாண்டூக்கிய உபநிடதம், சாந்தோக்கிய உபநிடதம், தைத்திரீய உபநிடதம், பிருகதாரணிய உபநிடதம், ஐதரேய உபநிடதம், கௌஷீதகீ உபநிடதம், சுவேதாஸ்தர உபநிடதம்

74. மக்களின் ஈடேற்றத்துக்கு உபநிடதங்கள் கூறும் உபதேசம் என்ன?

மக்களின் உயிரிலே பிரமம் உறைகிறது. உண்மையில் பிரமம் மக்களின் உயிராகவேயுள்ளது பிரமமே ஆன்மா, ஆதலால் மக்கள் பிரமத்தின் உண்மையை அறிவதோடு மட்டும் நின்றுவிடாது அப்பிரமத்தினை இடையறாது உணரும் நிலையை எய்துதல் வேண்டும். இந்த உயர் நிலையை ஒருவன் எய்தும் போது அவன் பிறப்பு இறப்புக்களில் நின்று விடுபெறுகின்றான். அவனுடைய உயிர் பிரமத்தோடு இரண்டறக் கலந்து விடுகிறது.

75. ஏகான்மவாதம் எனும் அத்துவித வேதாந்தத்தை நிறுவியவர் யார்?

சங்கரர்

76. இந்துக்களின் சிந்தனை வளர்ச்சியின் சிகரமாக விளங்குபவை எவை?

உபநிடதங்கள்

77. "ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று மூன்று முறை சாந்தி கூறு வதன் கருத்து என்ன?

பௌதிகப் பொருள்களாலும், பிற உயிர்களாலும், தெய் வங்களாலும் இடையூறு வராமல் இருப்பதற்கு

78. ஆசிரியரும், மாணவரும் ஒருமனப்பட்டு அறிவாராய்ச்சியில் ஈடுபடும் சிறப்பைக் காட்டும உபநிடதம் எது?

கட உபநிடதம்.

79. சைவ சமயத்தவர்க்கே சிறப்பு வாய்ந்ததாகக் கூறப்படும் உப நிடதம் எது?

சுவேதாஸ்வதர உபநிடதம்

80. சுவேதாஸ்வதர உபநிடதம் கூறுவது என்ன?

"உருத்திரனே பிரமம், உருத்திரனே முழுமுதற் கடவுள் அவனுக்கு இணையான தெய்வம் வேறு இல்லை. அவன் தன் ஆற்றலால் எல்லா உலகங்களையும் ஆள்கிறான் எல் லாப் பொருள்களையும் படைக்கிறான், காக்கிறான். கால முடிவில் அவற்றையெல்லாம் ஒடுக்கிக் கொள்கிறான்,

## சங்க நூல்கள்

81. சங்ககாலம் எது?

கி. மு. 300 - கி. பி. 300

82. மகாபாரதம், இராமாயணம் எனும் இரு இதிகாசங்களும் பதி னெண் புராணங்களும் எப்போ தோன்றின?

இதிகாச புராண காலத்திலே.

83. சங்க காலத்தில் தமிழ் நாட்டில் விளங்கிய ஐந்து நிலப்பிரிவு களையும் எழுதி அவற்றிற்குரிய தெய்வங்களையும் எழுதுக?

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | முருகன் |
| முல்லை | - | மாயோன் |
| மருதம் | - | இந்திரன் |
| நெய்தல் | - | வருணன் |
| பாலை | - | கொற்றவை |

84. ஆசிரியர் மறைமலையடிகளின் கூற்றுப்படி சங்ககாலத்தில் இருந்த கந்து எதைக் குறிக்கிறது?
சிவலிங்கத்தைக் குறிக்கிறது.

85. சங்க காலத்தில் சிவன் எவ்வெவ் பெயர்களால் அழைக்கப்பட்டார்?
தாழ்சடைபொலிந்த அருந்தவத்தோன், முக்கட்செல்வன், கறைமிடற்று அண்ணல், முது முதல்வன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், ஆலமர் செல்வன், புங்கம் ஊர்பவன், கணிச்சியோன்.

86. சிவன் முப்புரங்களைப் எரித்த போது ஆடிய கூத்து எது?
பாண்டரங்கம்.

87. சிவன் ஊழி இறுதியில் ஆடிய கூத்து எது?
கொடு கொட்டி,

88. சிவன் பிரமனுடைய தலையொன்றைக் கிள்ளி அம்மண்டையோட்டை ஏந்தி ஆடிய கூத்து எது?
காபாலம்.

89 சங்ககாலத்தில் எவ்வெவ்தெய்வங்களுக்கு கோயில்கள் இருந்தன?
முருகன், திருமால், காடுகிழாள்

## சம்பந்தர் வரலாறு சம்பந்தர் வரலாறு

90. சம்பந்தரின் தாய், தந்தை, பிறந்த இடம் தருக?
தாய் - பகவதியார்
தந்தை - சிவபாதவிருதயர்.
பிறந்த இடம் - சோழநாட்டிலுள்ள சீர்காழி

91. சம்பந்தர் பாடிய முதல் தேவாரம் எது?
தோடுடைய செவியன் ...........

92. சம்பந்தருக்கு ஆளுடைய பிள்ளையார் என்னும் பெயர் வரக் காரணம் என்ன ?
இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால்.

93. சம்பந்தருக்கு திருஞானசம்பந்தர் என்ற பெயர் வரக்காரணம் என்ன?
சிவஞான சம்பந்தம் பெற்றமையால்

94. திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற இடம் எது?
திருக்கோலக்கா

95. திருக்கோலக்கா என்னும் திருப்பதியில் உள்ள இறைவிக்கு "ஓசை கொடுத்த நாயகி" என்ற பெயர் வரக் காரணம் யாது?
சம்பந்தருக்கு இறைவன் கொடுத்த பொற்றாளத்திற்கு இறைவி ஓசை கொடுத்த காரணத்தால்.

96. நமது சமயத்தில் முதற் குரவர் யார்?
திருஞானசம்பந்தர் (ஆளுடைய பிள்ளையார்)

97. சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்து சின்னம் ஆகியன கிடைத்த திருத்தலம் எது?
மாறன் பாடி.

98. சம்பந்தரின் பாடல்களுக்கு யாழ்மீட்டி உடன் வாசிப்பவர் யார்?
திருநீலகண்டப் பெரும்பாணர்

99. பாணரின் யாழில் இட்டு வாசிக்க முடியாது போன தேவாரம் எது?
"மாதர் மடப் பிடியும் ............"

100. யாழ்முரி எனும் பதிகம் பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்.

101. கொல்லி மழவன் எனும் அரசனின் மகளின் முயலகன் எனும் நோயை நீக்க சம்பந்தர் பாடிய பதிகம் எது?
"துணிவளர் திங்கள் ......"

102. தம் அடியார்களினதும் பிறரினதும் குளிர்ச் சுரத்தைப் போக்க சம்பந்தர் பாடிய பதிகம் எது?
"அவ்வினைக் கிவ்வினை ........."

103. தந்தையாருக்கு யாகம் செய்வதற்கு இறைவனிடம் பொன் வேண்டுவதற்காக சம்பந்தர் பாடிய பதிகம் எது?
"இடரினும் தளரினும் ..........."

104. இறந்த வணிகனை உயிர்ப்பிக்க சம்பந்தர் பாடிய பதிகம் எது?
"சடையா யெனுமால்"

105. சம்பந்தரும் அப்பரும் சேர்ந்து செய்த அற்புதங்கள் எவை?
   1. திரு விழிமிழலையில் அடியார்களின் பஞ்சம் போக்க இருவரும் சேர்ந்து படிக்காசு பெற்றனர்,
   2. திருமறைக் காட்டில் தேவாரம் பாடி திருநாவுக்கரசர் கதவைத் திறப்பித்தார். சம்பந்தர் பதிகம் பாடி மூடச் செய்தார்.

106. சமணர்கள் தனது மடத்துக்கு தீ இட்ட போது சம்பந்தர் பாடிய தேவாரம் எது?
   "செய்யனே திருவாலவாய் ........................................."

107. அரசனுடைய வெப்பு நோயை சம்பந்தர் எவ்வாறு தீர்த்தார்?
   "மந்திரமாவது நீறு...... " என்னும் பதிகம் பாடி அரசனின் மேனியிலே திருநீறு இட்டு வெப்பு நோயைத் தீர்த்தார்

108. சமணர்களுடன் சம்பந்தர் செய்த வாதங்கள் எவை?
   அனல்வாதம், புனல்வாதம்.

109. இலங்கையிலுள்ள எந்தத் திருத்தலங்களைப் பற்றி சம்பந்தர் தேவாரம் பாடினார்?
   திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

110. திருமயிலாப்பூரில் பாம்பு தீண்டி இறந்த பூம்பாவை என்ற பெண்ணை சம்பந்தர் என்ன பதிகம் பாடி உயிர்ப்பித்தார்?
   "மட்டிட்ட புன்னை........"

111. திருஞானசம்பந்தருக்கு யாருடைய மகளை திருமணம் செய்ய ஏற்பாடாகியிருந்தது?
   நம்பியாண்டார் நம்பிகளின் மகளை.

112. தானும், தன் காதலியும் திருமணம் காணவந்த எல்லோருமாக சோதியுட் கலந்து முத்தியடைந்தவர் யார்?
   திருஞானசம்பந்தர்.

113. திருஞானசம்பந்தரின் குருபூசைத் தினம் எது?
   வைகாசி மூலம்.

114. திருஞானசம்பந்தருடைய வேறு பெயர்கள் என்ன?
   பாலறாவாயர், ஆளுடைய பிள்ளையார், கவுணியர் கோன், தென்புகலி வேந்தன், பரசமய கோளரி, காழிவேந்தர்.

## நாவுக்கரசர் வரலாறு

115. நாவுக்கரசரின் தாய், தந்தை பிறந்த இடம் எது?
தாய் - மாதினியார் தந்தை - புகழனார்
பிறந்த இடம் - திருமுனைப் பாடி நாட்டிலுள்ள திருவாமூர்

116. நாவுக்கரசரின் இளமைப் பெயர் என்ன?
மருணீகியார்.

117. நாவுக்கரசரின் தமக்கையார் பெயர் என்ன?
திலகவதியார்.

118. நாவுக்கரசருக்கு சமணர்கள் இட்ட பெயர் என்ன?
தருமசேனர்.

119. நாவுக்கரசர் பாடிய முதல் தேவாரம் எது?
''கூற்றாயினவாறு விலக்ககலீர்.........''

120. மருணீக்கியாருக்கு ''திருநாவுக்கரசு'' எனும் பெயர் எவ்வாறு வந்தது?
அற்புதமான தேவாரம் பாடியமையால் இறைவனே இவருக்கு இப் பெயரைச் சூட்டினார்.

121. நாவுக்கரசருக்கு சமணர்கள் செய்த செயல்களையும் அவர் பாடிய தேவாரங்களையும் எழுதுக?
1. நீற்றறையில் இட்டது - ''மாசில் வீணையும்......''
2. நஞ்சு கலந்து பாற்சோறு கொடுத்தது
- ''துஞ்சிருள் காலை மாலை......''
3. யானையை ஏவியது - ''சுண்ணவெண் சந்தன சாந்தும்''
4. கல்லுடன் கட்டிக் கடலில் போட்டது
- ''சொற்றுணை வேதியன்......''

122. நாவுக்கரசருக்கு ''உழவாரப் படையாளி'' என்ற பெயர் வரக் காரணம என்ன?
அவருடைய கையில் எப்பொழுதும் உழவாரம் இருப்பதனால்

123. இறைவனின் அருளால் சூல இடப இலச்சினைகள் தோளில் பொறிக்கப் பெற்றவர் யார்?
திருநாவுக்கரசர்.

124. தாம் செய்த நற்பணிகளுக்கெல்லாம் திருநாவுக்கரசரின் பெயரைச் சூட்டியவர் யார்?
அப்பூதியடிகள்.

125. பாம்பு தீண்டி இறந்த மூத்த திருநாவுக்கரசு எனும் பிள்ளையை உயிர் பெற வைக்க அப்பர் பாடிய பாடல் எது?
''ஒன்று கொலாமவர் சிந்தை ..''

126. வாக்கின் வேந்தர் எனும் பெயர் கொண்ட நாயனார் யார்?
திருநாவுக்கரசர்.

127. ''சுவாமி தேவரீரது வண்ணங் கண்டு வணங்கியன்றிப் போகேன்'' என்று உண்ணாவிரதம் இருந்த நாயனார் யார்?
திருநாவுக்கரசர்.

128. ''ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'' என உறுதியுடன் நின்றவர் யார்?
திருநாவுக்கரசர்.

129. அப்பர் தாம் திருவையாற்றிலே திருக்கையிலைக் காட்சி கண்டதும் பாடிய தேவாரம் எது?
''மாதர் பிறைக் கண்ணியானை...''

130. திருநாவுக்கரசரின் குரு பூசைத் தினம் எது?
சித்திரைச் சதயம்

131. திருநாவுக்கரசருக்குரிய வேறு பெயர்கள் எவை?
மருணீக்கியார், நாவுக்கரசர், சொற்கோ, வாக்கின்வேந்தர், அப்பர், வாகீசர், ஆளுடைய அரசு, உழவாரப் படையாளி, தாண்டக வேந்தர்

அ. திருநாவுக்கரசர் வாழ்ந்த காலம் எது என டாக்டர் இராசமாணிக்கனார் கூறுகின்றார்?
கி. பி. 580 முதல் கி. பி. 661 வரை

ஆ. அப்பர் எத்தனை வயதில் முத்தியடைந்தார்?
81 வயதில்

## சுந்தரர் வரலாறு

132. கயிலையில் இருந்த சுந்தரர் ஏன் மானிடப் பிறவி எடுத்தார்?
தான் செய்த ஒரு சிறு பிழைக்காக இறைவனால் தண்டனை கொடுக்கப்பட்டமையால்.

133. சுந்தரரின் பிள்ளைத் திருநாமம் எது?
நம்பியாரூரர்

134. சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள வந்த இறைவன் சென்று மறைந்த ஆலயம் எது?
திருவருட்துறை ஆலயம்.

135. தன்னைத் தடுத்தாட்கொள்ள வந்த இறைவனை வன்மை பேசிய படியால் சுந்தரருக்கு இறைவன் கொடுத்த பெயர் என்ன?
வன்றொண்டர்

136. "தம்பிரான் தோழர்" எனும் பெயர் கொண்ட நாயனார் யார்?
சுந்தரர்

137. கயிலையிலிருந்து பூவுலகுக்கு வந்த கமலினியார் என்ன பெயருடன் வாழ்ந்து வந்தார்?
பரவையார் என்னும் பெயருடன்

138. சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடுவதற்கு இறைவன் அடியெடுத்துக் கொடுத்த அடி எது?
"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"

139. ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தவர் யார்?
சுந்தரர்

140. சுந்தரரின் மனைவியான சங்கிலியார் செய்த தொண்டு என்ன?
சிவபெருமானுக்கு பூமாலை கட்டுதல்

141. சுந்தரர் சங்கிலியாரை முதன் முதல் எங்கே சந்தித்தார்?
திருவொற்றியூரில்

142. சுந்தரருக்கு இரண்டு கண்களும் எப்போ குருடாயின?
(சங்கிலியாரை விட்டுப் பிரியமாட்டேன் என்று உறுதிமொழி கூறியும்) திருவாரூர் தியாகேசப் பெருமானை நினைத்து அங்கு நடைபெறும் பங்குனி உத்தரத் திருவிழாவைக் காண்பதற்காக திருவொற்றியூரை விட்டு நீங்கியதும் அவரின் இரு கண்களும் குருடாயின.

143. கண்கள் குருடாகி அடியார்களின் உதவியுடன் நடந்து சென்ற சுந்தரருக்கு சிவபெருமானால் ஊன்றுகோல் கிடைக்கப் பெற்ற இடம் எது?
திருவெண்பாக்கம்

144. சுந்தரருக்கு இடக்கண் பார்வை கிடைத்த இடம் எது?
திருக்கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்)

145. சுந்தரருக்கு வலக்கண் பார்வை கிடைத்த இடம் எது?
திருவாரூர்

146. தன் மனைவியிடம் சிவபெருமானைத் தூது விட்டவர் யார்?
சுந்தரர்.

147. காவிரியாறு பிரிந்து வழி விட்டது யாருக்காக?
சுந்தரருக்காக.

148. முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலை வாயினின்றும் மீட்பதற்கு சுந்தரர் பாடிய பதிகம் எது?
''எற்றான் மறக்கேன்''

149. சுந்தரர் எத்தனை வயதில் சிவனடி சேர்ந்தார்?
18வது வயதில்

150. சுந்தரரின் குருபூசை தினம் எது?
ஆடிச்சோதி ( ஆடிமாதத்தில் வரும் சுவாதி நட்சத்திரம்?

151. சுந்தரருக்குரிய வேறு பெயர்கள் எவை?
ஆளுடைய நம்பி, வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன்.

152. சுந்தரர் தனது வாழ்க்கையை முடித்து முத்தி தரும்படி வேண்டி பாடிய பதிகம் எது?
தலைக்குத் தலைமாலை.

## மாணிக்கவாசகர் வரலாறு

153. மாணிக்கவாசகர் பிறந்த இடம் எது?
பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர்.

154. மாணிக்கவாசகர் யாருக்கு முதலமைச்சராக இருந்தார்?
அரிமர்த்தன பாண்டியனுக்கு.

155. வாதவூரருக்கு மாணிக்கவாசகர் என்ற பட்டத்தை இறைவன் ஏன் சூட்டினார்?
அவர் பாடிய பாடல்கள் எல்லாம் மணிமணியான சொற்களால் சேர்க்கப்பட்டமையால்.

156. வாதவூரருக்கு சிவன் முதலில் காட்சி கொடுத்த இடம் எது?
திருப்பெருந்துறை

157. மன்னவனிடம் எப்போ குதிரைகள் வரும் என்று மாணிக்கவாசகர் கூறினார்?
ஆவணி மூல நாளில்.

158. நரிகளைப் பரியாக்கிக் கொண்டு வரும்படியும் மண் சுமந்து பாண்டியனால் அடிபடும் படியும் பெற்றுக்கொண்டவர் யார்?
மாணிக்கவாசகர்,

159. சிவபெருமான் யாருக்காக மண் சுமந்தார்?
செம்மனச் செல்விக்காக.

160. கேட்போர் உள்ளத்தை உருக்கவல்ல தீந்தமிழ்த் திருப்பதிகங்களைப் பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்.

161. மாணிக்கவாசகர் சிவாநுபோக முதிர்ச்சி பெற்ற இடம் எது?
திருப்பெருந்துறை

162. உலகியற் பேறு வேண்டிய பெண்கள் பாடும் பாடல்களை சிவப்பேறு கோரும் பாடல்களாக உருவாக்கி மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் எவை?
திருவம்மானை, திருஉந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல் திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம் திருப்பொன்னூஞ்சல் அன்னைப்பத்து,

163. மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்த இடம் எது?

சிதம்பரம்

164. தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து கோவைப் பிரபந்தம் பாடியவர் யார்?

மாணிக்கவாசகர்

165. நீர் பாடிய பாடல்களுக்குப் பொருள் என்ன என்று மாணிக்க வாசகரிடம் வினாவியவர் யார்?

தில்லை வாழ் அந்தணர்

166. "பாடல்களுக்குரிய பொருளைக் காட்டுகிறோம் வாருங்கள்" என்று கூறி மாணிக்கவாசகர் எந்தக் கோயிலுக்குட் சென்று மறைந்தார்?

தில்லைப் பெருமால் கோயிலுக்குள்

167. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம் எது?

ஆனிமாமகம் ( ஆனிமாத மகநட்சத்திர நாள் )

168 மாணிக்கவாசகர் எத்தனை வயதில் முக்தியடைந்தார்?

முப்பத்திரண்டு வயதில்

169. மாணிக்கவாசகர் பாடல்கள் எப்படிப்பட்டவை?

கருப்பஞ்சாற்றிலே தேன் கலந்து, பால் கலந்து செங்கனித் தீஞ்சுவை கலந்தது போன்று தெவிட்டாது இனிக்கும். பாடுவோரின் உள்ளம் உருகிப் பக்திப் பரவசம் ஏற்படும். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது பழமொழி

அ) மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாறு எதனை விளக்கு கிறது?

அன்பு நெறியை

ஆ) வாதவூரர் என அழைக்கப்படுபவர் யார்?

மாணிக்கவாசகர்

இ) திருவாசகப் பாடல்களும், திருச்சிற்றம்பலக் கோவையாரும் பாடியவர் யார்?

மாணிக்கவாசகர்

## தோத்திரப் பாடல்கள்

170. "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த ........." இதில் வரும் சுனை எது?

திருக்கோணேஸ்வரர் ஆலய தீர்த்தமான பாவநாசம்

171. "தாயினும் நல்ல தலைவர்" என்று அடியார்கள் போற்றும் இறைவன் யார்?

திருக்கோணேஸ்வரர்

172. மருகலானடி வாழ்த்தி வழங்கினால் நாம் எவற்றைப் பெறலாம்?

தவத்தில் மேம்படலாம், அறியாமை நீங்கப் பெறலாம், மாறுபட்ட மனத்தைத் திருத்திக் கொள்ளலாம், சிவானந்தமான தேனை உண்டு அனுபவிக்கலாம்.

173. "கோல மால் வரை மத்தென நாட்டி .........." எனும் தேவாரம் நினைவூட்டும் விரதம் எது?

பிரதோஷ விரதம்

174. திருவெம்பாவையில் எத்தனை பாடல்கள் உண்டு?

20 பாடல்கள்

175. மதுரையிலே யாருக்காக இறைவன் மண் சுமந்தார்?

பிட்டு வாணிச்சிக்காக ( வந்திக் கிழவிக்காக )

176. "தோலும் துகிலும் ........." எனும் பாடல் நினைவூட்டும் இறைவடிவம் எது?

அர்த்த நாரீஸ்வரர்

177. "சுருதி வானவனாம்" எனும் திருவிசைப்பா பாடியவர் யார்?

கருவூர்த்தேவர்

178. சேந்தனார் "சீருந் திருவும் ........." எனும் திருப்பல்லாண்டை எங்கே வைத்துப் பாடினார்?

தில்லையில்

179. "திருமூவர் சொல்" எனும் சிறப்புப் பெயரைக் கொண்ட நூல் எது?

திருமந்திரம்

180. திருமந்திரத்தில் எத்தனை பாடல்கள் உண்டு?
3000 பாடல்கள்

181. பதினோராந் திருமுறை பாடியோர்கள் எத்தனை பேர்?
பன்னிரண்டு அருளாளர்கள்

182. பதினோராந் திருமுறையில் எத்தனை நூல்கள் உண்டு?
41 நூல்கள்

183. பெரிய புராணம் கூறும் அடியார்கள் எத்தனை பேர்?
63 தனியடியார்கள் 9 தொகையடியார்கள்

184. திருத்தொண்டத் தொகை பாடியவர் யார்?
சுந்தரர்

185. பெரிய புராண நாயகன் யார்?
சுந்தரர்

186. அந்தக் கரணங்கள் நான்கும் எவை?
மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

187. அருணகிரிநாதரின் நூல்களிலே தலை சிறந்தது எது?
திருப்புகழ்

188. அருணகிரிநாதர் பாடிய நூல்கள் எவை?
திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்பு கந்தரந்தாதி

189. சரஸ்வதியின் பேரில் சகலகலாவல்லிமாலை பாடியவர் யார்?
குமரகுருபரர்

190. அபிராமிப்பட்டரின் இட்ட தெய்வம் எது?
தேவி

191. சொல்நயம், பக்திநயம் யாவும் ஒன்றுசேர அமைந்து உள்ளத்தை உருக்கும் பாடல் எது?
அபிராமியந்தாதி

192. பராபரக் கண்ணி பாடியவர் யார்?
தாயுமானவர்

193. தாயுமானவர் எங்கே பிறந்தார்?
சோழநாட்டிலுள்ள திருமறைக் காட்டில்

194. வேதமும் ஆகமமும் யாரால் அருளிச் செய்யப்பட்டன ?
இறைவனால்

195. வேதம், ஆகமம் இரண்டிலும் பொது நூல் எது ?
சிறப்பு நூல் எது ?
பொது நூல் - வேதம் சிறப்பு நூல் - ஆகமம்

196. ஆகமங்கள் எத்தனை ?
28

197. உபாகமங்கள் எத்தனை ?
207

198. ஆகமங்களுக்கு வழி நூல்கள் எவை ?
உபாகமங்கள்

199. ஆகமங்களுக்குரிய சார்பு நூல்கள் எவை ?
தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம்

200. பாஞ்சராத்திரம் என்று பெயர் பெறுபவை எவை ?
வைணவ ஆகமங்கள்

201. தந்திரங்கள் என்று பொதுவாகப் பெயர் பெறுபவை எவை ?
சாக்த ஆகமங்கள்

202. ஆகமங்கள் முதலில் யாரால் யாருக்கு சொல்லப்பட்டது ?
சிவபெருமானால் உமாதேவியாருக்கு

203. ஆகமங்கள் எப்போ தோன்றின ?
புராண இதிகாச காலத்தில் (கி. மு. 600 - கி. பி. 200)

204. ஆகமக் கருத்துக்களைத் தமிழிலே பாடியவர் யார் ?
திருமூலர்

205. ஆகமப் பொருளைத் தமிழிலே கூறும் முதல் நூல் எது ?
திருமந்திரம்

206. தமிழ் மூவாயிரம் என்று கூறப்படுவது எது ?
திருமந்திரம

207. திருமந்திரம் எத்தனை தந்திரங்களை உடையது ?
ஒன்பது தந்திரங்களை உடையது

திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களையும் எழுதி அவற்றின் கருத்துக்களையும் எழுதுக.

1. முதலாந் தந்திரம் - காரணாகமத்தின் சாரமாய் அமைந்துள்ளது. சைவமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் பலவற்றை எடுத்துக் கூறுகிறது.

2. இரண்டாந் தந்திரம் - காமிகத்தின் சாரமாய் அமைந்துள்ளது. இதிலே சிற்சில புராண வரலாற்றுக் குறிப்புகளும், கரு உற்பத்தியும் சிவன் இயற்றும் ஐந்தொழில்களும் பேசப்படுகின்றன.

3. மூன்றாம் தந்திரம் - வீராகமத்தின் சாரம். இதிலே அட்டமா சித்தி அட்டாங்கயோகம், ஆயுட்பரீட்சை முதலான செய்திகள் அடங்கியுள்ளன.

4. நான்காம் தந்திரம் - சிந்தாகமத்தின் சாரம். இதிலே பலசக்கர அமைப்புக்களும் வயிரவி மந்திரம் போன்ற மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன.

5. ஐந்தாம் தந்திரம் - வாதுளாகமத்தின் சாரம். சைவத்தின் வகைகள் நான்கு மார்க்கங்கள் அவற்றால் பெறும் முத்தி நிலைகள் போன்றவை பற்றிக் கூறப்பட்டுள்ளன.

6. ஆறாம் தந்திரம் - வியாமளாகமத்தின் சாரம். சிவகுருதரிசனம் திருவடிப்பேறு, திருநீற்றின் மாண்பு, துறவு, தவம் முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

7. ஏழாந் தந்திரம் - கலோத்தராகமத்தின் சாரம். இதிலே இலிங்க வகைகள் ஆறு ஆதாரங்கள், மகேசுவரபூசை, சமாதி அமையும் முறை, குருபூசை விதி, முதலானவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.

8. எட்டாந் தந்திரம் - சுப்பிராகமத்தின் சாரம். இதிலே பதி, பசு, பாசம் விளக்கும் தத்துவமசி என்ற வாக்கிய ஆராய்ச்சி, முக்குற்றம், முப்பாழ் முதலிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

9. ஒன்பதாந் தந்திரம் - மகுடாகமத்தின் சாரம். இதிலே பஞ்சாக்கர விளக்கம் திருக்கூத்துத்தரிசனம், ஞானோதயம், சிவசொரூப தரிசனம், மோன சமாதி, அணைந்தோர் தன்மை முதலியன

208. ஒவ்வொரு ஆகமமும் எத்தனை பகுதிகளையுடையன ? அவை எவை?

நான்கு பகுதிகளை உடையன
சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம்

209. ஆகமங்களின் குறிக்கோள் என்ன ?

ஆன்மாக்களின் ஞானம் எய்திச் சிவத்தோடு இரண்டறக் கலக்கும் முத்திக்கு வழிகாட்டுவது

210. சரியாபாதம் கூறுபவை எவை ?

பிராயச்சித்த விதி, பவித்திர விதி, சிவலிங்க இலக்கணம், திருமேனிகளின் இலக்கணம், செபமாலை, யோகபட்டம், தண்டம், முதலியவற்றின் இலக்கணம், அந்தியேட்டி விதி, சிரார்த்த விதி போன்றவை

211. கிரியாபாதம் கூறுபவை எவை ?

மந்திரங்களின் உச்சாரணம், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம், சமய, விசேட, நிர்வாண தீட்சைகள் ஆசாரியா விடேகம், சிவசின்னம் அணிதல், சிவப்பிரசாதம் உண்ணல் போன்றவை

212. யோகபாதம் கூறுபவை எவை ?

முப்பத்தாறு தத்தவங்கள், சித்தி உண்டாகும் முறைகள், அட்டாங்கயோகவியல்புகள், ஆறு ஆதாரங்கள் போன்றவற்றின் முறைகள்

213. ஞானபாதம் கூறுபவை எவை ?

பரமசிவனுடைய சொரூபம், மூவகை ஆன்மாக்களின் சொரூபம், பாசங்களின் சொரூபம், சக்தியின் சொரூபம், முப்பத்தாறு தத்துவங்களின் உற்பத்தி, இவை ஆன்மாக்கள் போகம் புசித்தற்குக் கருவியாகும் முறையும், புவனேசுரர் சொரூபமும், பிரளயங்களின் சொரூபமும்' ஐந்தொழில் முறையும், மகாவிரதம், பாசுபதம், காபாலம் முதலிய மதங்களின் சொரூபமும் கூறுகின்றது

214. ஆலய வழிபாட்டோடு தொடர்புடைய எவற்றை ஆகமங்கள் கூறுகின்றன ?

ஆலயம் அமைத்தற்கான இடம், ஆலய அமைப்பு முறை, தெய்வச்சிலைகள் வடிக்கும் இலக்கணம், சிலைகளை நிலை நாட்டும் விதி, வாகனங்களை அமைக்கும் முறை, தேர் அமைக்கும் முறை, அருச்சகர் ஒழுக்கம், அடியார் நடை முறை ஆலய தரிசன விதி, பூசை விழாக்கள் செய்யும் முறை, அவற்றின் பலன்கள் போன்றவை

215. ஆன்மாக்களை இறைவனிடம் இலயிக்கும்படி செய்யும் இடம் எது?

ஆலயம்

216. உடலையே ஆலயமாகக் கொண்டு உயிரிலே இறைவனைக் கண்டு வழிபடுபவர் யார்?

ஞானியர்

217. முத்தி இன்பம் பெறுவதற்கு முக்கியமான சாதனம் எது?

ஆலய வழிபாடு

218. ஆரிய மக்களின் சமய நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டது எது?

வேதம்

219. திராவிட மக்களின் கடவுள் கொள்கையையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டது எது?

ஆகமம்

220. நான்கு வருணத்தவரும் யார்?

பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர்

221. வேதாந்த தெளிவாம் சைவ சித்தாந்தம் என்று கூறியவர் யார்?

உமாபதி சிவச்சாரியார்

222. உலகர்க்கு உரிய நூல் எது? சத்திநி பாதத்தார்க்கு உரிய நூல் எது?

உலகர்க்கு உரிய நூல் - வேதம்

சத்திநி பாதத்தார்க்கு உரிய நூல் - ஆகமம்

223. வேதத்திற்கும் ஆகமத்திற்குமுள்ள வேறுபாடுகள் எவை?

| | வேதம் | ஆகமம் |
|---|---|---|
| 1. | ஆரிய மக்களின் சமய நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டது. | திராவிட மக்களின் கடவுட் கொள்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டது. |
| 2. | முதல் மூன்று வர்ணத்தவருமே வேதம் ஓதுவதற்கு உரியவர் என்கிறது; | நான்கு வர்ணத்தவரும் சிவனை வழிபட்டு முத்தி பெறலாம் என்று கூறுகின்றது. |
| 3. | வேள்விகளில் விலங்குகளைப் பலியிடுவதை ஒப்புக்கொள்கின்றது. | வேள்விகளில் விலங்குகளைப் பலியிடுவதை எதிர்க்கிறது. |
| 4. | பல தெய்வ வழிபாட்டுக்கு முதன்மை அளிக்கிறது. | சிவ வழிபாடு ஒன்றையே ஏற்றுக் கொள்கிறது. |
| 5. | பொது நூல். | சிறப்பு நூல் |
| 6. | வேதப் பாசுரங்களெல்லாம் பொதுவாக இம்மைப்பயன் வேண்டுவதாகவே உள்ளன. | மக்கள் இம்மையிலே முத்தி பெறுவதற்குரிய வழிகளையே வலியுறுத்துகிறது. |
| 7. | உலகர்க்குரிய நூல். | சத்தி நிபாதத்தார்க்குரிய நூல் |

## சிவதீட்சை

224. நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழி எது?

மந்திரம்

225. இறைவனோடு இரண்டறக் கலக்கும் முத்தி என்னும் இலக்கை அடைய உதவும் நடைமுறை எது?

தீட்சை

226. சிவபெருமானைத் தியானித்து விதிப்படி வழிபடுவதற்கு நமக்கு தகுதியளிப்பது எது?

சிவதீட்சை

227. தீட்சை என்பதன் பொருள் என்ன?

ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுத்தல்

228. தீட்சையின் இருவகைகளும் எவை?

சாதாரண தீட்சை, நிராதர தீட்சை

229. நிராதர தீட்சை என்றால் என்ன?

பரமசிவன் விஞ்ஞான கலருக்கும் பிரளயாகலருக்கும் முத்தியருளும் முறை நிராதர தீட்சை எனப்படும்.

230. சாதாரண தீட்சை என்றால் என்ன?

பரமசிவன் ஞானாசிரியரை அதிட்டித்து நின்று தீட்சையளிப்பது, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுமுள்ள சகலர்க்கும் அளிக்கும் தீட்சை சாதாரண தீட்சை எனப்படும்.

231. சாதாரண தீட்சையில் அடங்கும் ஏழு தீட்சைகளும் எவை?

நயனதீட்சை, பரிசதீட்சை, வாசகதீட்சை. மானசதீட்சை சாத்திர தீட்சை' யோக தீட்சை, ஔத்திரி தீட்சை.

232. ஏழு தீட்சைகளையும் எழுதி அவற்றின் கருத்தையும் எழுதுக?

1. நயன தீட்சை - மாணாக்கர் சட்டை சாத்தி உருகும், பேரும் உறவுங் கொண்டெழுந்தருளி அருள் நோக்கம் செய்தல்
2. பரிச தீட்சை - கையால் தீண்டுதல்
3. வாசக தீட்சை - சொற்களால் உபதேசித்தல்
4. மானச தீட்சை - குருயோக சித்தியால் சீடனது மனத்துள் பிரவேசித்து அவனுக்கு சுத்தி செய்விக்கும் தீட்சை

5. சாத்திரதிட்சை - பதி, பசு, பாசங்களின் இலக்கணங்களையும் பசுபாசத்தின் நீங்கி முத்தியடையும் முறைமையையும் நூல்வழியாக ஆசிரியர் சீடனுக்கு உபதேசிப்பது?

6. யோகதிட்சை - ஆசிரியர் நிராதர சிவயோகத்தினை அப்பியாசம் பண்ணும்படி சீடனுக்கு உபதேசித்தல்.

7. ஔத்திரிதிட்சை - ஓமத்தோடு கூடச் செய்யப்படுவது.

233. ஔத்திரி திட்சையின் இரண்டு வகைகளும் எவை?

ஞானவதி. கிரியாவதி

234. எம்பெருமான் குருவாக வந்து திருஞானசம்பந்தப் பிள்ளைக்கு அளித்த திட்சை எது?

நயனதிட்சை

235. அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோருக்கு எம்பெருமான் கொடுத்தருளிய திட்சை எது?

திருவடித் திட்சை,

236. ஞானாசிரியர் திருநோக்கினால் மாணாக்கனது பாசத்தை சேதிக்கும் ( அழிக்கும் ) திட்சைக்குரிய பெயர் என்ன ?

சாம்பவ திட்சை.

237. பாலர், விருத்தர், நோயுற்றோர் முதலான சமய அனுட்டானங்கள் செய்ய முடியாதவர்களுக்கு அவற்றைச் செய்வதற்குப் பதிலாக உபதேசிக்கப்படும் திட்சை எது ?

நிர்ப்பீச திட்சை.

238. திட்சை அளிக்கும் ஆசாரியாருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் எவை ?

சமயதிட்சை, விசேடதிட்சை, நிர்வாண திட்சை, ஆசாரிய பிடேகம் என்னும் நான்கும் பெற்றுக்கொண்டவராய் இருத்தல் வேண்டும். மனக்குற்றமும், உடற்குற்றமும் இல்லாதிருத்தல், கல்வி, அறிவு, ஒழுக்கம் நிரம்பப் பெற்றவராய் இருத்தல், நான்கு பாதங்களை அறிந்தவராய் இருத்தல், சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையும், சைவசமயத்தையும் போதித்தலில் திறமைவாய்ந்தவராக இருத்தல். பதினாறுவயதுக்கும் எழுபதுவயதுக்கும் உட்பட்டவராயிருத்தல்.

239. தீட்சை பெற விரும்புவோருக்கு இருக்க வேண்டியவை எவை?
ஒழுக்க சீலராய் இருக்க வேண்டும், பண்பும், ஆசார மும் குரு பக்தியும் கொண்டவராக விளங்கவேண்டும், உலகப் பற்றுக்களைக் குறைத்து தியானத்தில் ஈடுபடு கின்றவராயும் இருத்தல் வேண்டும். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

240. சமய தீட்சை என்றால் என்ன ?
சைவசமய ஆசாரத்தை அனுட்டிக்கும் படி முதலாகச் செய்யப்படும் தீட்சை,

241. விசேட தீட்சை என்றால் என்ன ?
சமயதீட்சை பெற்றபின் சாதகனைச் சிவலிங்கம் பூசை செய்வதற்கு தகுதியுடையவனாக்கும் இரண்டாவது தீட்சை.

242. நிர்வாண தீட்சை என்றால் என்ன ?
சமயதீட்சை. விசேடதீட்சை இரண்டும் பெற்றவர் தாம் முன்செய்த வினையெல்லாம் போக்குவதற்காக இறுதியாக செய்து கொள்வது.

243. ஆசாரி அபிடேகம் என்றால் என்ன ?
நிர்வாண தீட்சிதர் குருவாவதற்கு அதிகாரம் பெறும் பொருட்டு செய்து கொள்ளும் வினைமுறை

244. சைவ அனுட்டானம் செய்வதற்குத் தகுதி அளிக்கும் தீட்சை எது ?
சமய தீட்சை,

245. சமய தீட்சை பெற்றோர் விபூதியை எவ்வாறு தரித்தல் வேண்டும் ?
திரிபுண்டரமாக,

246. சமய தீட்சை பெற்றவர்களுக்குரிய முக்கியமானசெயல் எது ?
பஞ்சாட்சர மந்திர செபம்.

247. தீட்சை பெற்றோர் செய்பவை எவை ?
நீராடல், சந்தியாவந்தனம், செபம், தியானம், குரு சேவை, சிவனடியார் சேவை, சரியைத்தொண்டு.

# குரு இலிங்க சங்கம வழிபாடு

248. குரு என்பதன் பொருள் என்ன?
அறியாமையைப் போக்குபவர்.

249. சிவன் கோயில்களில் கருவறையின் தெற்குச் சுவரில் உள்ள மூர்த்தி எது?
தட்சணாமூர்த்தி

250. மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் எவ்வாறு தீட்சை அளித்தார்?
குருவாக வந்து குருந்த மர நிழலில் இருந்து திருவடித் தீட்சை செய்தருளினார்

251. திருஞானசம்பந்தருக்கு சிவன் எவ்வாறு தீட்சை அளித்தார்?
ஞானப் பாலூட்டி நயன தீட்சை அளித்தார்

252. சுந்தரருக்கு சிவன் எவ்வாறு தீட்சை அளித்தார்?
சித்தவட மடத்திற் படுத்திருந்த போது கம் திருப்பாதத்தை அவரின் தலையில் வைத்து திருவடித் தீட்சை செய்தருளினார்

253. நாவுக்கரசருக்கு சிவன் எவ்வாறு தீட்சையளித்தார்?
தனக்குத் திருவடித்தீட்சை செய்யுமாறு இறைவனிடம் வேண்ட அவரை நல்லூருக்கு அழைப்பித்தவுடன் நாவுக்கரசர் இறைவனை வணங்கி எழும்போது "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று அவருடையசென்னி மீது இறைவன் தம் திருவடிகளை வைத்தார்

254. சிவபெருமான் எவ்வாறான வழிபாட்டை ஏற்றுக்கொள்வார்?
புறத்தே சிவலிங்கம் முதலான இறைவனின் திருமேனிகளையும், குருவையும், சங்கமத்தையும், ஆதாரமாகக் கொண்டு அகத்தே உயிரை இடமாகக் கொண்டும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றருளுவார்

255. "ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" - என்று கூறுவது எது?
சிவஞான போதம் ( 12 ஆம் சூத்திரம் )

256. சிவலிங்கத்தை. எவ்வாறு வணங்க வேண்டும்?
சிவன் என்று வணங்க வேண்டும்

257. சமணர்கள் சிவலிங்கத்தை மறைத்து விட்டு பள்ளி அமைத்த இடம் எது?
வடதளி

258. சமணர்களால் மறைத்து வைத்த சிவலிங்கத்தைக் கண்டு வணங்குவதற்காக தவம் இருந்தவர் யார்?
வாகீசன்

259. வாகீசன் எனப்படுபவர் யார்?
திருநாவுக்கரசர்

260. குருலிங்க சங்கமம் என்பதில் சங்கமம் யாரைக் குறிக்கிறது?
அடியார்களை

261. பெரிய புராணத்திலே திருக்கூட்டச் சிறப்பு எனும் பகுதியில் யாருடைய பெருமை கூறப்படுகின்றது?
சிவனடியார்களின் பெருமை

262. சித்தவட மடத்திலே எந்த நாயனாருடன் அடியாராக வந்த சிவபெருமான் படுத்துறங்கினார்?
சுந்தரமூர்த்தி நாயனாருடன்

263. அடியார்கள் எவ்வாறு காட்சியளிப்பர்?
உருத்திராக்க மணிமாலை அணிந்திருப்பர், உடலிலே தூய வெண்ணீறு பூசியிருப்பர், இவர்களுடைய உள்ளம் தூய்மையானது இவர்கள் ஞான ஒளியைப் பரப்புவார்கள்

264. முற்காலத்தில் கதிர்காமத்துக்குச் சென்றவர்கள் ஒருவரை ஒருவர் 'சுவாமி'' என்று அழைத்ததன் காரணம் என்ன?
முருகனும் அவர்களுள் ஒருவராக நிற்பர் என்ற நம்பிக்கை

265. சங்கம வழிபாட்டால் மிக உயர்ந்த நிலையை அடைந்தவர் யார்?
விறன்மிண்ட நாயனார்

266. அப்பூதியடிகளார் வழிபட்ட சிவனடியார் யார்?
திருநாவுக்கரசர்

267. சம்பந்தரின் சிவிகையை தாமும் சுமந்து சென்ற நாயனார் யார்?
திருநாவுக்கரசர்

268. சிவனடியார்களை சிவனென மதித்த அரன் யார்?
சேரமான் பெருமான் நாயனார்

269. ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும்......... அரன் எனத் தொழுமே'' என்று கூறுவது எது?
சிவஞான போதத்தின் இறுதிச் சூத்திரம்

## திருக்கோயிலும் திருவிழாவும்

270. சிவன் எத்தனை வடிவங்களைக் கொண்டவர் ?
25 வடிவங்களைக் கொண்டவர்

271. ஆலயங்களில் நடைபெறும் ஆறுகாலப் பூசைகளும் எவை ?
திருவனந்தல், காலை, உச்சி, மாலை, இரண்டாம் சாமம் அர்த்த சாமம்

272. மகோற்சவம் எதனை நினைவூட்டுகிறது ?
இறைவனின் ஐந்தொழில்களை

273. மகோற்சவம் ஐந்தொழில்களையும் தொடர்பு படுத்துவதை விளக்குக ?

| | | |
|---|---|---|
| படைத்தல் | - | கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் |
| காத்தல் | - | வாகனத் திருவிழா |
| அழித்தல் | - | தேர்த்திருவிழா |
| மறைத்தல் | - | மௌனோர்ச்சவம் |
| அருளல் | - | தீர்த்தம் |

274. உற்சவத்தின் ஆரம்பத்திலே ஊர் நன்மை பெறுவதற்காக வைரவ மூர்த்திக்கு செய்யப்படும் பூசை எது ?
கிராம சாந்தி

275. வீதியைச் சுத்தம் செய்வதற்காக செய்யப்படுவது எது ?
வாஸ்து சாந்தி

276. சுத்தமான புற்று மண் எடுத்து முளையிடுதல் ஏன் நடைபெறுகிறது ?
உலகிலே தானிய விருத்திக்காக

277. விழாக்கள் இடையூறின்று நிறைவேற வேண்டுமென்பதற்காக ஆசாரியர் செய்வது என்ன ?
தனக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் காப்புக்கட்டுவார்

278. உலகெலாம் நன்மை உண்டாவதற்காக ஆசாரியர் செய்வது என்ன ?
மேளம் அடித்தல்

279. கொடியேற்றம் எதைக் குறிக்கிறது?
ஆணவம் வலியிழந்து ஆன்மா மலநீக்கம் பெறுதற் பொருட்டு திருவருளாகிய கொடியை ஏற்றுதல்

280. ஆலயத்திலுள்ள கொடிமரம், அதனைச் சுற்றியுள்ள சீலை அதனுடன் சேர்ந்த கயிறு என்பன எவற்றைக் குறிக்கின்றன?
கொடிமரம் - பதி, சீலை - பசு, கயிறு - பாசம்

281. தீர்த்தத்திருவிழாவன்று நடக்கும் திருக்கல்யாணம் எதைக் குறிக்கின்றது?
அருள்வடிவான சக்தி அறிவு மயமான சிவத்தோடு கலந்து பிரபஞ்சத்தை இயக்க வைப்பதைக் குறிக்கின்றது

282. நித்திய பூசைகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்குபவை எவை?
நைமித்திய பூசைகள்

283. நைமித்திய பூசை என்றால் என்ன?
திருவிழாக்கள்

284. தீட்சை பெறாதவர், தீயோர் யாவரும் விழாக்காலங்களில் உற்சவமூர்த்திகளைத் தரிசித்தலினால் பெறும் தீட்சை எது?
சாம்பவ தீட்சை

285. பயனை அவாவிச் செய்யப்படும் பூசை எது?
காமிய பூசை

286. பயன் கருதாமல் செய்யப்படும் பூசை எது?
நிஷ்காமிய பூசை

287. திருவிழாக்கள் ஏன் மக்கள் மனதில் ஒரு நிலையான இடத்தைப் பெறுகின்றன?
ஊர் மக்களை ஒன்று சேர்க்கின்றன. ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கின்றன. மக்கள் மனதில் நற்பண்புகளை வளர்க்கின்றன சொந்தக் கவலைகளை மறந்து அமைதிமிக்கதோர் புது உலகில் அவர்களை வாழச் செய்கின்றன.

## விரதங்கள்

288. விரதம் என்பதற்கு நாவலர் கூறும் வரைவிலக்கணம் என்ன ?
மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும மனம், வாக்கு, காயம், என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்.

289. உபவாசம் என்பதன் பொருள் என்ன ?
இறைவனோடு மிகவும் நெருங்கியிருந்து வழிபடுவதும் இறைவனின் சிந்தனையோடு இருப்பதும்.

290. சிவவிரதங்களுள் முதன்மை வாய்ந்த மூன்றும் எவை ?
சிவராத்திரி, பிரதோஷம், திருவாதிரை

291. முருகனின் விரதங்களில் முக்கியமானது எது ?
கந்தசஷ்டி.

292. எங்கள் சமயத்தினர் வாழும் இடங்களிலெல்லாம் அனுட்டிக்கப் படும் சக்தி விரதம் எது ?
நவராத்திரி.

293. பிள்ளையாரின் தோற்றத்தை வருணிக்க ?
உலகிற்கு மூலமாய்த் தோன்றிய ஓங்காரம் திருமுகமாகவும், உலகங்களின் தொகுப்பாய் அமையும் இடம் பெருவயிறாகவும், உலகத்தைத் தாங்கும் ஆற்றல் காலாகவும் அமையப்பெற்ற திருமேனியே பிள்ளையார் திருவுருவாகும். பிள்ளையார் எல்லா ஒலிக்கும் முற்பட்ட ஓங்காரத்தினின்று எழுத்தொலிகளையெல்லாம் வகுத்து எழுதிக் கலைகளை வளர்ப்பவர் என்பதைக் குறிப்பதற்காகவே ஒற்றைக்கொம்பு அவரது திருக்கரத்தில் அமைந்துள்ளது.

பிள்ளையாரின் மற்றொருகையிலுள்ள மோதகம் அவர் வயிற்றுள் வைத்துப்பாதுகாக்கின்ற உலகத்திற்கு அடையாளமாகும். பிள்ளையாரின் மேற்கரத்திலுள்ள அங்குசம் உயிர்களின் செருக்கை அடக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது. மற்றொரு மேற்கரத்திலுள்ளது பாசக் கயிறு அது எல்லாவற்றையும் ஒருவழிப்படுத்தி ஒழுங்கு செய்யும் ஆற்றலைக் குறிக்கின்றது.

294. தம்மை நினைப்பவர்களுடைய இடையூறுகளை நீக்க வல்லவர் என்பதால் பிள்ளையார் பெறும் பெயர் என்ன ?
விக்கினேசுவரர்.

295. பிள்ளையாரின் வாகனம் எது?
பெருச்சாளி.

296. எந்தவொரு பூசையையோ, சடங்கையோ, கருமத்தையோ தொடங்குமுன் சொல்லப்படும் சுலோகம் எது?
பிள்ளயார் சுலோகம்

297. விநாயகப் பெருமானுக்குரிய சதுர்த்தி விரதம் அனுட்டிக்கப் படும் நாள் எது?
ஆவணி மாதத்து சுக்கில பட்சத்து சதுர்த்தி (வளர்பிறை நான்காம் நாள்)

298. விநாயக சஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் காலம் எது?
கார்த்திகை மாதத்து தேய்பிறை முதலாம் நாளிலே தொடங்கி மார்கழி மாதத்து வளர்பிறை ஆறாம் நாள் வரை.

299. முருகனுக்கு குறிஞ்சிக்கடவுள் என்று பெயர் வரக் காரணம் என்ன!
குன்று தோறும் கோயில் கொண்டிருப்பதால்.

300. அவரவர்க்கு ஏற்ற நிலையில் பல்வேறு வடிவங்கள் எடுத்து அருள் புரிபவர் யார்?
முருகப் பெருமான்.

301. கந்தசஷ்டி என்றால் என்ன?
மறக் கருணையினால் சூரனை ஆட்கொண்டு முருகப் பெருமான் தம் ஊர்தியும், கொடியுமாகக் கொண்ட நாட்களே கந்தசஷ்டி எனப்படும்.

302. கந்தசஷ்டிக்குரிய நாட்கள் எவை?
ஐப்பசி மாதம் சுக்கில பட்சப் பிரதமையிலிருந்து ஆறு நாள் இந்நோன்புக்குரிய காலம்.

303. சூரன் போர்த் திருவிழா எப்போ நடைபெறுகிறது?
கந்தசஷ்டியின் இறுதி நாள்.

304. நவராத்திரி நாயகிகள் மூவர் யார்?
துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி.

305. நவராத்திரி விழா அனுட்டிக்கப்படும் காலம் எது?
புரட்டாதிமாதத்து வளர்பிறையின் முதல் ஒன்பது நாட்களும்.

306. நவராத்திரியின் பத்தாம் நாள் நடைபெறுவது எது?
விஜயதசமி (மகா நோன்பு, மானம்பு)

307. அன்னை மகிடாசுரனைச் சங்கரித்து உலகுக்கு மகிழ்ச்சியை யும் சமாதானத்தையும், அன்பையும் நல்கிய திருநாள் எது?
விஜயதசமித் திருநாள்

308. நவராத்திரியின் ஒன்பதாம் நாள் எது?
மகாநவமி

309. ஆயுத பூசைநாள் எப்போ நடை பெறுகின்றது?
நவராத்திரியின் ஒன்பதாம் நாள் (மகாநவமி)

310. ஆயுத பூசை நாளன்று நடை பெறுபவை எவை?
வீடுகளிலே திருமுறைகளையுஞ் சாத்திரங்களையும் பூசையில் வைத்துப் பூசிப்பர், பாடசாலைகளில் இது பெரிய விழா வாகக் கொண்டாடப்படும் தொழில் செய்பவர் அனை வரும் தத்தம் கருவிகளைப் பூசையில் வைத்து வணங்குவர்

311. அருவுருவ வடிவில் இறைவன் கோயில்களில் வீற்றிருக்கும் மூர்த்தம் எது?
சிவலிங்கப் பெருமான்

312. சிவன் அம்மையப்பனாக நடுவில் முருகனுடன் காட்சியளிக்கும் கோலம் எது?
சோமாஸ்கந்த வடிவம்

313. வளர்பிறை தேய்பிறையாகிய இரண்டு பருவத்தும் பதின் மூன்றாம் நாளாகிய திரயோதசி திதியிலே அனுட்டிக்கப்படும் விரதம் எது?
பிரதோஷவிரதம்

314. பிரதோஷ காலம் எது?
பரமகருணாமூர்த்தியாகிய கடவுள் ஆலகால விடத்தை உண்டு தேவர்களுக்கு அருள் அளித்து நடனம் ஆடி நிட்டை கூடி இருந்தகாலம்

315. இறைவனுக்கு தியாகேசர் என்ற பெயர் ஏன் வந்தது?
உயிர்களைக் காக்க நஞ்சையுண்டமையால்

316. செல்வச் செருக்குக்கும், கல்விச்செருக்குக்கும் எட்டாதது பரம் பொருள் என்பதை விளக்குவது எது?
திருமாலும் பிரமாவும் அடிமுடிதேடிய கதை

317. இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட காலம் எது?
மகா சிவராத்திரி

318. மகா சிவராத்திரி எப்போ அனுஷ்டிக்கப்படுகின்றது?
மாசி மாதத்து தேய்பிறை பதினான்காம் நாள்

319. எமது நாட்டில் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படும் தலம் எது ?
திருக்கேதீச்சரம்

320. இலக்குமி நாயகன் யார் ? சரஸ்வதி நாயகன் யார் ?
இலக்குமி நாயகன் திருமால், சரஸ்வதி நாயகன் பிரமா

321. திருவாதிரை யாருக்குரியது நட்சத்திரம் ?
சிவனுக்குரியது

322. திருவாதிரை எப்போ அனுஷ்டிக்கப்படுகின்றது ?
மார்கழி மாதம் வரும் திருவாதிரை நட்சத்திரத்தில்

323. திருவெம்பாவை விரதத்தின் இறுதிநாளாக அமைவது எது ?
திருவாதிரை

324. திருவாதிரை உற்சவத்தை வேறு எவ்வாறு அழைப்பர் ?
ஆருத்திர தரிசனம்

325. நடராஜப் பெருமான் திருச்சடையில் எதை அணிந்துள்ளார் ?
பிறையை

326. நடராஜர் வடிவில் ஊன்றிய திருவடியின் கீழ் குப்புறக் கிடப்பவன் யார் ?
முயலகன்

327. நடராஜ வடிவத்தில் அமைந்துள்ள தத்துவத்தை விளக்குக ?
நடராஜப்பெருமான் வலது திருக்கரத்திலே துடியை ஏந்தியிருக்கின்றார். இது படைக்கும் தொழிலையும், வலது திருக்கரத்தில் ஒன்றாகிய அபயகரம் அஞ்ச வேண்டாம் என்ற குறிப்பைக் காட்டுகிறது. இதுகாக்கும் தொழிலையும் இடது திருக்கரத்திலே ஏந்தியுள்ள தீச்சுடர் அழிக்கும் தொழிலையும், ஊன்றியதிருவடி மறைக்கும் தொழிலையும், தூக்கிய திருவடி குஞ்சிதபாதமாகும், இது அருளும் தொழிலையும் குறிக்கின்றது

328. இந்தியாவிலே ஆருத்திர தரிசனம் விசேடமாகக் கொண்டாடப்படும் தலம் எது ?
சிதம்பரம் ( தில்லை )

329. இலங்கையில் ஆருத்திர தரிசனம் விசேடமாகக் கொண்டாடப்படும் தலம் எது ?
காரைநகர் சிவன் கோயில்

330. இலங்கையில் ஈழத்துச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஆலயம் எது ?
காரைநகர் சிவன் கோயில்

## பண்டிகைகள்

331. உள்ளத் தூய்மையை வளர்ப்பதற்கு வழியாக அமைந்தவை எவை?
விசேட நாட்கள்.

332. சத்துவ குணத்தை வளர்க்கச் சாதனமாக அமைந்தவை எவை?
விசேட நாட்கள்

333. உள்ளத்தை மாறி மாறி ஆட்சி செய்யும் மூன்று குணங்களும் எவை?
தாமத குணம், இராசத குணம், சத்துவ குணம்

334. சோம்பலும் சோர்வும் நிறைந்தது எது?
தாமத குணம்

335. உணர்ச்சி வசப்பட்டுக் கோபமும் தாபமும் மாறி மாறி இயங்கும் குணம் எது?
இராசத குணம்

336. சாந்தமும் அமைதியும் நிறைந்த குணம் எது?
சத்துவ குணம்

337. பௌர்ணமி நாட்களில் மேலோங்கி நிற்கும் குணம் எது?
சத்துவ குணம்

338. நாம் சூரியனை வழிபடுவதற்குரிய காரணம் என்ன?
உணவுற்பத்திக்கும், உயிர்களின் வளர்ச்சிக்கும், சூரியன் வேண்டிய சக்தியை வழங்குவதால்

339. உத்தராயணம் என்றால் என்ன?
சூரியன் தைமாதம் முதல் ஆனிமாதம் வரை வடக்கு நோக்கிச் செல்வது

340. தட்சிணாயனம் என்றால் என்ன?
சூரியன் ஆடி முதல் மார்கழி வரை தெற்கு நோக்கிச் செல்வது

341. சந்தியாவந்தனம் என்றால் என்ன?
காலையும் மாலையும் சூரியனை வழிபடுதல்

342. பொங்கலுக்கு அடுத்த நாள் என்ன நடைபெறும்?
மாட்டுப் பொங்கல் (பட்டிப் பொங்கல

343. எமது வாழ்வில் முக்கியமான விழா எது?
தைப்பொங்கல்

344. நாட்டிலே பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் பெருகும் காலம் எது?
இளவேனிற் காலம்

345. இளவேனிற் காலத்தில் முதலாவது மாதம் எது?
சித்திரை

346. எந்தக் காலத்திலே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது ?
சூரியன் மேடராசியில் புகும் காலத்தில்

347. சூரியன் மேடராசியில் புகும் காலத்தில் எந்த கோயிலின் மூலத்தானத்தைக் கடக்கிறது ?
மதுரை மீனாட்சியம்மன் கோயில் மூலதானத்தைக் கடக்கிறது

348. வருடப் பிறப்பன்று நாம் எதைத் தலையில் வைத்து நீராடுகின்றோம் ?
மருத்து நீரை

349. தீபாவளி என்ற சொல்லின் பொருள் என்ன ?
தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தல்

350. தீபாவளி எப்போ பிறக்கின்றது?
ஐப்பசி மாதத்திலே கிருஷ்ண பட்சத்து சதுர்த்தசி தினத்தில்

351. காத்தற் கடவுள் யார்?
விஷ்ணு

352. "நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும் தர்மத்தைநிலை நாட்டவும் காலந்தோறும் நான் தோன்றுகின்றேன்" என்று கூறியவர் யார்?
ஸ்ரீ கிருஷ்ண பகவான்

353. எதனை நினைவு கூருமுகமாக நாம் தீபாவளியை கொண்டாடுகிறோம்?
மக்களையெல்லாம் வருத்திய நரகாசுரன் என்னும் அரசனை கிருஷ்ண பகவான் அழித்ததை நினைவு கூர்வதற்காக

354. தீபாவளியின் தத்துவம் என்ன?
ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவதுதான் தீபாவளியின் தத்துவம்

# தோத்திரப் பாடல்கள்

## பாடல்களும், பாடியவர்களும், சந்தர்ப்பங்களும்

| பாடல் | பாடியவர் | சந்தர்ப்பம் |
|---|---|---|
| "பண்ணும் பதமேழும் ... ....." | திருஞானசம்பந்தர் | திருவீழிமிழலைத் திருப்பதிகம் |
| "தாயினும் நல்ல ........" | திருஞானசம்பந்தர் | திருகோணமலைத் திருப்பதிகம் |
| "என்ன புண்ணியஞ் ........" | திருஞானசம்பந்தர் | திருவலஞ்சுழித் திருப்பதிகம் |
| "மாதற் பிறைக் கண்ணி........" | திருநாவுக்கரசர் | திருவையாற்றுத் திருப்பதிகம் |
| "பெருகலாந் தவம்" | திருநாவுக்கரசர் | திருக்குறுந்தொகை |
| "ஓசை ஒலியெலாம் ........" | திருநாவுக்கரசர் | திருவையாற்றுத் திருத்தாண்டகம் |
| "கோல மால் வரை........" | சுந்தரமூர்த்தி நாயனார் | திருப்புன் கூர்த் திருப்பதிக |
| "முன்னிக் கடலைச் சுருக்கி........" | மாணிக்கவாசகர் | திருவம்மானை |
| "பண் சுமந்த பாடற் பரிசு" | மாணிக்கவாசகர் | திருவம்மானை |
| "தோலுந் துகிலும் குழையும் ........" | மாணிக்கவாசகர் | திருக்கோத்தும்பீ |

| பாடல் | பாடியவர் | சந்தர்ப்பம் |
|---|---|---|
| "சுருதி வான வானந் ......" | கருவூர்த்தேவர் | திருவிசைப்பா |
| "சீருந் திருவும் பொய......" | சேந்தனார் | திருப்பல்லாண்டு |
| "உள்ளம் பெருங் கோயில் ......" | திருமூலர் | திருமந்திரம் |
| "திருவாக்கும் செய்கருமங்......" | கபிலதேவநாயனார் | திருவிரட்டை மணிமாலை |
| "அண்ணலார் தமக்களித்த ......" | சேக்கிழார் | பெரியபுராணம் |
| "கையுந் தலைமிசை ......" | சேக்கிழார் | பெரியபுராணம் |
| "ஐந்து பேரறிவும்......" | சேக்கிழார் | பெரியபுராணம் |
| "மூவிரு முகங்கள் போற்றி......" | கச்சியப்பர் | கந்தபுராணம் |
| "விழிக்குத் துணை......" | அருணகிரிநாதர் | கந்தரலங்காரம் |
| "பண்ணும் பரதமும்......" | குமரகுருபரர் | சகலகலாவல்லி மாலை |
| "தனந்தரும் கல்வி தரும்......" | அபிராமிப்பட்டர் | அபிராமியந்தாதி |

## நூலாசிரியரின் வெளியீடுகள்

★ பொது அறிவு
— போட்டிப்பரீட்சைக்குரியது.

★ பொது உளச்சார்பு
— போட்டிப்பரீட்சைக்குரியது.

★ தமிழ் மொழிக்களஞ்சியம்
— போட்டிப்பரீட்சைக்குரியது.

★ தமிழ் இலக்கியம் பாகம் I சந்தர்ப்பம் கூறுதல்
— க. பொ. த. சாதாரணதரம்.

★ சைவசமயம் வினா - விடை
— க. பொ. த. சாதாரணதரம்.

★ சைவசமயம் 3 வருட வினாக்களும், விடைகளும்
— க. பொ. த. சாதாரணதரம்.

★ சைவசமயம் 5 மாதிரி வினாக்களும், விடைகளும்
— க. பொ. த. சாதாரணதரம்.

★ சைவசமயம் பாகம் II ஆண்டு 11
— க. பொ. த. சாதாரணதரம்

★ சைவசமயம் பாகம் I ஆண்டு 10
— க. பொ. த. சாதாரணதரம்.

★ சைவசமயம் பரீட்சைத் துணைநூல்
— ஆண்டு 9

★ சைவசமயம் பரீட்சைத் துணைநூல்
— ஆண்டு 8

★ சைவசமயம் வினா - விடை
— ஆண்டு 7

★ சைவசமயம் பரீட்சைத் துணைநூல்
— ஆண்டு 6

★ தமிழ் இலக்கியம் பாகம் I சந்தர்ப்பம் கூறுதல்
— க. பொ. த. சாதாரணதரம் (திருத்திய பதிப்பு)

# சக்தி நூல் நிலையம்

உங்களுக்குத் தேவையான

- ஸ்ரீ பாடசாலைப் புத்தகங்கள்
- ஸ்ரீ பாடசாலை உபகரணங்கள்
- ஸ்ரீ மாதாந்த, வாராந்தப் பத்திரிகைகள்
- ஸ்ரீ சகல விதமான கொப்பி வகைகள்
- ஸ்ரீ கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்
- ஸ்ரீ காரியாலய உபகரணங்கள்
- ஸ்ரீ சினிமாப் பத்திரிகைகள்
- ஸ்ரீ எவர்சில்வர் பாத்திரங்கள்
- ஸ்ரீ நாவல்கள்

எம்மிடம் கிடைக்கும்

53, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.

☎ 065 - 2103

## SAKTHI NOOL NILAYAM

53, TRINCO ROAD,

BATTICALOA,


வளர்மதி அச்சகம் மட்டக்களப்பு.